# 30-06-2024 செய்தி

## பசிபிக் பெருங்கடலையொட்டிய 29 நாடுகள் போர்ப் பயிற்சி

- உலகின் மிகப்பெரும் கடல்சார் போர் பயிற்சியான 'ரிம் ஆஃப் பசிபிக்' (ரிம்பேக்) பயிற்சியில் இந்திய கடற்படை பங்கேற்றது.
- ஹவாய் தீவில் நடைபெறும் இந்தப் பயிற்சியில் 29 நாடுகள், 40 கப்பல்கள், 3 போர்க்கப்பல்கள், 150-க்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் 25,000-க்கும் மேற்பட்ட கடற்படை வீரர்கள் பங்கேற்கின்றனர்.
- இந்தப் பயிற்சியில் பங்கேற்பதற்காக தென் சீனக் கடல் மற்றும் வட பசிபிக் பெருங்கடலில் நிலை நிறுத்தப்பட்டிருந்த இந்தியாவின் பல்நோக்கு போர்க்கப்பலான ஐஎன்எஸ் ஷிவாலிக் பேர்ல் துறைமுகத்தை சென்றடைந்தது.

## தேசிய தேர்வுகள் முகமை என்டிஏ செயல்படும் முறைகள்

- மத்திய அரசால் நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வுகளை ஒரே குடையின் கீழ் நடத்துவதற்காக 2017- ஆம் ஆண்டு கல்வி அமைச்சகத்தின் கீழ் தேசிய தேர்வு முகமை (என்டிஏ) உருவாக்கப்பட்டது.
- இந்த அமைப்பு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1860-இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு உட்பட்டது.
- இதன் முதல் தலைமை இயக்குநராக வினித் ஜோஷி நியமிக்கப்பட்டார். அவர் தற்போது மணிப்பூர் மாநில தலைமைச் செயலராக பதவி வகித்து வருகிறார்.
- என்டிஏ உருவாக்கப்படுவதற்கு முன்பு நுழைவுத் தேர்வுகளை பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி), மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) ஆகியவை தற்போது நடத்தி வந்தன.

**1992 இல் பரிந்துரை**

- தேசிய அளவில் தேர்வுகளை நடத்துவதற்கு ஒரு அமைப்பை நிறுவ வேண்டும் என நடவடிக்கைத் திட்டம் 1992இன் கீழ் பரிந்துரைக்கப்பட்டது.
- இது 1986-ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கையோடு தொடர்புடைய திட்டமாகும்.

**என்டிஏ நடத்தும் தேர்வுகள்**

- ஜிஜிடி உள்ளிட்ட மத்திய உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் இளநிலை பொறியியல்-தொழில்நுட்ப படிப்புகள் சேர்க்கைக்கான ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு (ஜேஇஇ- முதல்நிலை), நீட் மற்றும் பொதுப்பல்கலைக் கழக நுழைவுத் தேர்வு (க்யூட்-யுஜி) உதவிப் பேராசியர் பணிக்கான தகுதி மற்றும் மத்திய அரசின் உதவித் தொகையுடன் கூடிய ஆராய்ச்சிப் படிப்புக்கு தகுதி பெறுவதற்கான நெட் (தேசிய தகுதித் தேர்வு) தேர்வு உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளை என்டிஏ நடத்துகிறது.
- மேலும் பொது மேலாண்மை சேர்க்கைக்கான தேர்வு (சிஎம்ஏடி), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஏ.ஆர்) தில்லி பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களுக்கான நுழைவுத் தேர்வுகளும் என்டிஏவால் நடத்தப்படுகிறது.

**உயர்நிலைக்குழு அமைப்பு**

- என்டிஏவின் தலைமை இயக்குநராக இருந்த சுபோத் குமார் சிங் அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.
- அவருக்குப் பதிலாக ஐடிபிஓ தலைவர் பிரதீப் சிங் கரோலாவுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது.
- மேலும், போட்டித் தேர்வுகளை சீரமைக்கவும் என்டிஏவில் உள்ள குறைபாடுகளைக் களைந்து மறுசீரமைக்கவும் முன்னாள் இஸ்ரோ தலைவர் கே. ராதாகிருஷ்ணன் தலைமையில் பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

## பிரதமரின் கதி சக்தி திட்டத்தால் சீனாவை முந்தும் இந்தியா

- இந்தியாவின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக 2021-ம் ஆண்டு கதி சக்தி திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கினார்.
- இதன்படி ரயில்வே, சாலை, துறைமுகங்கள் உள்ளிட்ட 16 அமைச்சகங்கள் ஒன்றிணைக்கப்பட்டு உள்ளன. இந்த திட்டம் ரூ. 100 லட்சம் கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- புதிதாக அறிவிக்கப்படும் திட்டங்கள் குறித்த நேரத்தில் நிறைவு பெறாமல் திட்டச் செலவு அதிகரிப்பது நாட்டின் மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது.
- இதற்கு தீர்வு காணும் வகையில் கதி சக்தி திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து திட்டப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன.
- இதன்மூலம் குறித்த நேரத்தில் திட்டங்கள் நிறைவு பெற்று மக்களின் வரிப்பணம் வீணாவது தடுக்கப்படுகிறது.
- கதி சக்தி திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் 101 புதிய துறைமுகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 200 புதிய விமான நிலையங்களை உருவாக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

**துறைமுகங்கள்**

- உலக வங்கியின் சரக்கு குறியீடு ஆய்வறிக்கை 2023-ன் படி, சர்வதேச துறைமுகங்களின் சரக்கு கையாளும் வேகத்தில் இந்தியா முன்னணியில் இருக்கிறது.
- அமெரிக்க துறைமுகங்களுக்கு வரும் சரக்கு கப்பல்களில் இருந்து சராசரியாக 1.5 நாட்களில் சரக்குகள் இறக்கப்படுகின்றன.
- ஆஸ்திரேலியாவில் 1.7 நாட்கள், சிங்கப்பூரில் ஒரு நாள் என்ற வகையில் சரக்குகள் கையாளப்படுகின்றன.
- ஆனால் இந்திய துறைமுகங்களில் 0.9 நாளில் கப்பல்களில் இருந்து சரக்குகள் இறக்கப்படுகின்றன.
- கதி சக்தி திட்டத்தின்கீழ் இந்தியாவின் சாகர் மாலா (நீர்வழித்தடம்) திட்டத்தில் 220 நீர்வழித்தட திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன.

## அழ நாடு என்று அழைக்கப்பட்ட தேனி மாவட்டம்

- பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு தேனி மாவட்டம் 'அழ நாடு' என்று அழைக்கபட்டதாக கல்வெட்டு ஆய்வில் தெரியவந்துள்ளது.
- மயிலாடும்பாறை பால் வண்ண நாதர் கோயிலில் ஆய்வு நடத்தினார். இதில், கி.பி.13-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர்கால கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது.
- இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் மூ. செல்வம் கூறியதாவது:
- தேனி மாவட்டம் பண்டைய காலத்தில் 'அழ நாடு' என்று அழைக்கப்பட்டது.
- பிற்காலத்தில் நிர்வாகக் காரணங்களுக்காக இதனை பல வள நாடுகளாகப் பிரித்தனர். அதனடிப்படையில், மலைகள் சூழ்ந்த குறிஞ்சி நிலமான இன்றைய வருசநாடு அப்போது வரிசை நாடு என்று அழைக்கப்பட்டது.
- இந்த வரிசை நாட்டின் மிக முக்கியமான ஊர்களில், ஒன்றாக மயிலாடும் பாறை இருந்துள்ளது.
- மூன்று வரிகள் கொண்ட இந்த துண்டு கல்வெட்டில், மயிலாடும் பாறை ஊரின் பழைய பெயர் 'ஒரோமிஸ்' என்றும் அங்கு இருக்கும் இறைவனின் பெயர் ஒரோமிஸ் வரம் உடைய நாயனார் என்றும் அறிய முடிகிறது.
- இறைவனுக்கு, தினமும் அமுது படைப்பதற்காக நிலம் தானம் செய்யப்பட்டதை இந்தக் கல்வெட்டு உணர்த்துகிறது.

